தேனியில் சிறைக் கைதிகள் தப்பியதற்கு அரசின் அலட்சியமே காரணம்!

அமைச்சர் நிர்மல் குமாரை உடனே பதவி நீக்கம் செய்க!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் வலியுறுத்தல் !

சென்னை, அக்.29-

"தேனியில் சிறைக்கைதிகள் தப்பிய தற்கு அரசின் அலட்சியமே காரணம்! எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட சட் டத்துறை அமைச்சர் நிர்மல்குமாரை பதவி நீக்கம் செய்க" என கழக சட்டத் துறை இணைச் செயலாளர் இ.பரந்தா மன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சிறையில் இருந்து மொத்தமாக கைதிகள் தப்பித்து ஓடும் சம்பவம் 31 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. ஒரு தலைமுறையே மறந்து போன நிகழ்வு. த.வெ.க. ஆட்சி யில் அரங்கேறியிருக்கிறது. தேனி தேக் கம்பட்டி கிளைச் சிறையிலிருந்து 17 விசாரணைக் கைதிகள் தப்பியோடியி ருக்கிறார்கள். சிறைத்துறையின் கடு மையான பாதுகாப்புக் குறைபாட்டை யும், நிர்வாக அலட்சியத்தையும் வெளிச் சம்போட்டுக் காட்டியிருக்கிறது இந்த சம் பவம்.

'வலிப்பு நோய்' நாடகம் ஆடி சிறைக் காவலர்களை இரும்புத் தடிகளால் கொடூரமாகத் தாக்கி, சிறைச் சாவிக ளைப் பறித்துக் கொண்டு முதன்மை நுழைவு வாயில் வழியாகவே கைதிகள் தப்பிச் சென்றிருக்கிறார்கள். முதன்மை வாசல் வழியாகவே 17 கைதிகளும் ஒரே நேரத்தில் தப்பி சென்றிருப்பது சிறைத் துறை வரலாற்றிலேயே நடக் காத ஒன்று!

அரசு சார்பற்ற
விரிவான அறிக்கை அவசியம்!

கைதிகளின் நாடகத்தை முன்கூட்



டியே கணிக்கத் தவறியது, அவசரக் காலப் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றாதது என்பதெல்லாம் அப்பட்ட மான மனிதத் தவறுகள்தான். பாதுகாப் புப் பணியில் அலட்சியமாக இருந்த 9 சிறைக் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள னர். உயர் மட்ட அளவில் பொறுப்பு வகிக்கும் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறை ஊழியர்களில் எவரேனும் கைதிகளுக்கு உடந்தையாக இருந்தார் களா? லஞ்சம் மற்றும் கூட்டுச் சதி ஏதே னும் பின்னணியில் உள்ளதா? என் பதை எல்லாம் விரிவான விசார ணைக்கு உட்படுத்தினால்தான், உண் மைகள் வெளிவரும். வெறும் கீழ்மட்ட ஊழியர்கள் பணியிடை நீக்கம் மட்டும் தான் நடவடிக்கையா? குற்றவியல் நட வடிக்கைக்கு அரசு சார்பற்ற விரிவான விசாரணை அவசியம்.

உயர்நீதிமன்ற நீதிபதி
தலைமையில் விசாரணை ஆணையம்!

தப்பியோடிய கைதிகளைப் பிடிக்க 17 தனிப்படைகள் அமைக்கப்பட்டிருக்கி றது. 13 கைதிகள் கைது செய்யப்பட்டுள் ளனர். தப்பி ஓடிய மாற்றுத்திறனாளி கைதியை ஒரு ஆட்டோ டிரைவரே பிடித் துக் கொடுத்திருக்கிறார். யார் கண்டுபி டித்து கொடுத்தார்கள் என்பதில் முரண் பாடுகள் நிலவுகிறது. இதையெல்லாம் கண்டறிய விசாரணைக் கமிஷன் அவ சியம்.

புழல் சிறையில் இரண்டு கைதிகள் தப்பியோடிய சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்குள்ளேயே தேனி சம்பவம் நடந்திருக்கிறது. அடுத்தடுத்து இப்படி சம் பவம் நடப்பதற்கு பின்னணி என்ன? என்பதை வெளிப்படையாக மக்களுக்கு தெரிவிக்க சென்னை உயர் நீதிமன்ற த்தின் தற்போதைய நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணை ஆணை யம் அமைத்தால்தான் மொத்த உண் மைகளும் வெளிவரும். இந்த விசார ணைக் கமிஷன் தேனி சம்பவத்திற்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்த அவசியமாகும்.

சிறைச்சாலைகள் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் இரும்பு அரண்கள். அங்கே எந்தவொரு சிறு அலட்சியமும், கவனச்சிதறலும் ஒட்டுமொத்த மாநிலத் தின் சட்டம் - ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாக மாறிவிடும். தற்காலத் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் சர்வ தேசச் சிறை பாதுகாப்பு நெறிமுறைக ளின் அடிப்படையில் சிறைத்துறையில் முக்கியச் சீர்திருத்தங்கள் உருவாக்க வேண்டும். இனிவரும் காலங்களில் சிறைக் கைதிகள் தப்பித்து ஓடும் நிகழ்வு கள் நடக்காமல் இருக்க விசாரணை ஆணையத்தின் மூலம் புதிய கட்டுப் பாட்டு விதிமுறை (SOP) உருவாக்கப்பட வேண்டும்.

நிர்வாகத்தில் சோடைபோன
அமைச்சர் நிர்மல் குமார்!

தேனி சிறையில் காவலர்கள் பற்றாக் குறை இருக்கிறது. கூடுதல் பணியாளர் களை நியமிக்க வேண்டும் என அர சுக்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதனை அரசு அலட்சி யம் செய்திருப்பதுதான் தேனி சம்பவம் நடப்பதற்கு காரணம். இதனையெல் லாம் கண்டறிய, பணியில் இருக்கும் நீதிபதியை கொண்டு விசாரித்தால்தான் உண்மை தெரியும்.

மின்சாரம், சட்டம், சிறை, ஊழல் தடுப்பு என நிறைய துறைகளை கையில் வைத்திருக்கும் அமைச்சர் நிர்மல்குமார் தன்னுடைய எல்லா துறையிலும் சோடை போயிருக்கிறார். மின்வெட்டு, அதிக விலைக்கு மின்சாரம் கொள்மு தல், அரசு வழக்கறிஞர்கள் நியம ணத் திற்கு லஞ்சம், ஆட்சிக்கு வந்து 50 கைதி கள் சிறைகளில் இருந்து தப்பித்தல் என நிர்மல்குமாரின் துறைகள் மோசமாக செயல்பட்டிருக் கின்றன. இந்த நிர்மல்குமாரை உடனடியாக அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

இவ்வாறு கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது:

அறத்திற்கு புறம்பானதாக இருக்கிறது!

மல்லை சி.ஏ.சத்யா கண்டனம்!

சென்னை, அக். 29-

"முன்னாள் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் கைது அறத்திற்கு புறம்பானதாக இருக்கிறது" என்று திராவிட வெற்றிக் கழ கத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:-

2021 மே மாதம் தொடங்கி 2026 ஏப்ரல் வரை ஐந்தாண்டுகள் முதலமைச்ச ராக இருந்த அண்ணன் தலை வர் தளபதி அவர்களின் தலை மையிலான திராவிட மாடல் பொற்கால ஆட்சியில் தனி யார் பள்ளிகளுக்கும் மேலை நாட்டு பள்ளிகளுக்கும் சவால் விடும் வகையில் புதிய



பள்ளிக் கட்டிடங்கள், நவீன தொழில் நுட்பத்தில் வகுப்ப றைகள், என்று சிறப்பாக செயல்பட்டு இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட் டத்தை அறிமுகப்படுத்தி ஏழை எளிய மக்களின் கண் ணீரை துடைத்து அதை வட அமெரிக்கா நாடான கனடா போன்ற நாடுகள் பாராட்டி யதும் பாரதியின் பாட்டு வரிக்கு இலக்கணமாக கல்வி யில் சிறந்த தமிழ்நாடு என்று நாடும்,ஏடும் போற்றிப் பாராட்டும் வண்ணம் சிறப் பாக செயல்பட்டார். அப் போதைய பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

இந்நிலையில் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கியது தொடர்பான வழக்கு பதிவு செய்யப்பட் டது வழக்கைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ளாமல் காவல் துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வந்த நிலையில் அவரைக் கைது செய்யவேண்டும் என்ற அர சியல் காழ்ப்புணர்ச்சி காரண மாக அவர் அமைச்சராக இருந்தவர் அரசியல் செல் வாக்கு படைத்தவர் வழக்கை திசை திருப்பி விடுவார் என்று உண்மைக்கு மாறான கார ணங்களை சொல்லி 26/10/2026 திங்கட்கிழமை அன்று கைது செய்து சிறை யில் அடைத்து இருப்பது அர சியல் பழிவாங்கும் நடவடிக் கையே இது அறத்திற்கு புறம்பானது,

தமிழ் நாட்டில் நாள்தோ றும் கொலை, கொள்ளை, போதை கலாச்சாரம், கற்ப ழிப்பு, ஆள் கடத்தல், இவை நடக்காதே நாளே இல்லை என்ற அளவிற்கு தமிழ்நாட் டில் சட்டம் ஒழுங்கு கெட்டு சந்திசிரிக்கும் நிலையில் 27/10/2026 அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் தேக்கம்பட்டி மாவட்ட சிறைச் சாலையில் இரவு நேரப் பணியில் இருந்த சிறைக் காவலர்களை தாக்கி விட்டு கைதிகள் 17 பேர் தப்பி ஓட்டம் நாளுக்கு நாள் சினிமா பாணியில் திகில் படத் திருப்பங்கள் போன்று குற்றச் சம்பவங்கள் நடந்து கொண்டு வருகிறது அதை திசைதிருப்ப எதிர்க்கட்சி களின் ஜனநாயக குரல்வ ளையை நெரிக்கும் வகையில் கைது செய்வதாக என்ன தோன்றுகிறது,

எனவே சீர்கெட்டுக் கிடக் கும் சட்டம்,ஒழுங்கை சரி செய்து மக்களுக்கு பாதுகாப் பான அரசாக செயல்பட முத லமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் தலைமையிலான த.வெ.க. அரசை திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள் கின்றேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

த.வெ.க. அரசின் போக்குவரத்துக் கழக நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து

மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் கண்டன உரையாற்றினார்!

சென்னை, அக். 29

த.வெ.க. அரசின் போக்கு வரத்துக் கழக நிர்வாக சீர்கே டுகளை கண்டித்து மாநகர் போக்குவரத்துக் கழக ஊழி யர் முன்னேற்ற சங்கம் சார் பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (28.10.2026 புதன்கி ழமை) மாலை 4 மணியள வில் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் எதிரே பல்லவன் சாலையில் நடை பெற்றது.

அதில் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ், 10 சத விகிதம் ஊக்கத்தொகை வழங்குதல்,

வெற்றிப்பயண பேருந்து களில் பணிபுரியும் தொழிலா ளர்கள் தினப்படி /வசூல்ப டியை உயர்த்துதல்,

போக்குவரத்துக் கழகங்க ளில் பணிபுரிந்து ஓய்வுபெற் றோர்இயற்கை எய்திய தொழிலாளர்களின் பணப்ப லன்களை உடனே வழங்கு தல்

தினந்தோறும் டீசல் செலவை ஈடுசெய்ய நடவ டிக்கை எடுத்தல்,

போக்குவரத்துக் கழக பேருந்துகளின் பராமரிப்பை மேம்படுத்துதல் ஆகிய கோரி க்கைகளை நடைபெற்றது. கண்டன வலியுறுத்தி ஆர்ப் பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார் வரவேற் புரை ஆற்றினார். சங்கத் தலைவர் கோ.மோகன்குமார் தலைமையுரையாற்றினார்.

தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் கண் டன உரையாற்றினார்.

சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் நன்றி கூறி னார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேரவைச் செயலாளர்கள் என்.தனசேகரன், எம்.சண்மு கம், பேரவை அலுவலக செய லாளர் ப.பன்னீர்செல்வம், அரசு விரைவு போக்குவரத்து கழக பொதுச் செயலாளர் ப.பன்னீர்செல்வம், மாநகர் போக்குவரத்துக் கழக அலுவ லக பணியாளர் சங்கப் பொதுச் செயலாளர் வி. மகேந்திரன் மற்றும் மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைமை நிலைய செயலாளர் அ.தங்க ராஜ், அமைப்புச் செயலாளர் நா.செல்வகுமார், பிரச்சாரச் செயலாளர் மு.ஜோதி, தலைமைச் சங்க நிர்வாகிகள், பணி மனைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் சங்கம் முன்னோடிகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



த.வெ.க. அரசின் போக்குவரத்துக் கழக நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார் வரவேற்புரை ஆற்றினார். சங்கத் தலைவர் கோ.மோகன்குமார் தலைமையுரையாற்றினார். தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் கண்டன உரையாற்றினார். சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பேரவைச் செயலாளர்கள் என்.தனசேகரன், எம்.சண்முகம், பேரவை அலுவலக செயலாளர் ப.பன்னீர்செல்வம், அரசு விரைவு போக்குவரத்து கழக பொதுச் செயலாளர் ப.பன்னீர்செல்வம், மாநகர் போக்குவரத்துக் கழக அலுவலக பணியாளர் சங்கப் பொதுச் செயலாளர் வி.மகேந்திரன் மற்றும் மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைமை நிலைய செயலாளர் அ.தங்கராஜ், அமைப்புச் செயலாளர் நா.செல்வகுமார், பிரச்சாரச் செயலாளர் மு.ஜோதி, தலைமைச் சங்க நிர்வாகிகள், பணிமனைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் சங்கம் முன்னோடிகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் அன்னியூர் சிவா Ex MLA , பா.அப்துல்மாலிக் முன்னிலையில்

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயற்குழுக் கூட்டம் இன்று (29-10-2026 வியாழக்கிழமை) மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, பா.அப்துல்மாலிக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

நேரம்	தொகுதி	இடம்
காலை 9.00.மணி	ஆவடி சட்ட மன்ற தொகுதி	ஜெய்கீரிஸ் மஹால் பட்டாபிராம்
காலை 11.00 மணி	பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி	ஹோட்டல் ஹைவே ஜெயின் பூவிருந்தவல்லி

இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் – பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டசெயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.


பொருள்: கழக மறு சீரமைப்பு பணி குறித்து மற்றும் கழக ஆக்கப் பணிகள்

ஆவடி சா.மு.நாசர்,
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(27.10.2026)



1. சென்னை அடையாறு அருகே காவல் நிலை யத்தில் நிபந்தனை கையெழுத்து போட்டுவிட்டு வீடு திரும்பிய ரவுடி பட்டப் பகலில் சரமாரியாக வெட்டிக் படுகொலை ....

2. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே திட்டம்குளத்தில் காய்கறி மார்க்கெட்டில் உருவ கேலி செய்ததால் சக நண்பரை கோடாரியால் வெட்டி கொலை செய்த தொழிலாளி ...

3. விழுப்புரம் அருகே பிரபல ரவுடியை சரமாரியாக வெட்டிக் கொலை செய்த கும்பல்....

4. ஆவடியை அடுத்த திருமுல்லைவாயிலில் மது போதையில் தகராறு, அறி வாளால் சரமாரியாக வெட்டி வாலிபர் படுகொலை ...



5. விருதுநகர் அருகே அல்லம்பட்டி கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த கணவனை மண் ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரித்துக் கொன்ற மனைவி ...

6. குமரி மாவட்டம் பத்மநாபபுரம் நீதிமன்றத்திற்கு விவகாரத்து வழக்கிற்காக ஆஜராக வந்த இளம் பெண்ணை அறிவாளால் சரமாரியாக வெட்டிய கணவன்....

7. திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அருகே தரடப்பட்டு கிராமத்தில் பாட்டியின் பராமரிப்பில் இருந்த மூன்று சிறுமிகள் கடத்தல்..? கிராமத் தில் பரபரப்பு ...



8. சென்னை வியாசர்பாடியில் சவாரி வர மறுத்த ஆட்டோ டிரைவருக்கு சரமாரியாக கத்திக் குத்து...

9. சென்னை வடபழனியில் கட்டுமான நிறுவனம் மேற்பார்வையாளர் வீட்டில் பீரோவை உடைத்து 30 சவரன் நகை திருட்டு ....

10. சென்னை கோயம்பேடு பேருந்து நிலை யத்தில் பயணிகளை குறி வைத்து தொடரும் செல்போன் திருட்டுக்கள். இரண்டு பேர் சிக்கினர் ...

11. சென்னை கொளத்தூரில் பிரசித்தி பெற்ற நாகாத்தம்மன் கோவிலின் உண்டியலை உடைத்து பணம் திருட்டு ...

12. சேலம் மாவட்டம் ஆட்டையாம்பட்டியில் வழிப்பறி திருடர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சென்றபோது காவலர்களை தள்ளிவிட்டு தப்பிய இரண்டு கைதிகள் ....



13. சென்னை கொடுங்கையூரில் இருந்து அண்ணா சதுக்கம் செல்லும் மாநகரப் பேருந்தில் கொலை செய்ய வேண்டுமா என்னை தொடர்பு கொள்ளலாம் என்று செல் போன் எண்ணுடன் விளம்பரம் செய்த பிரபல ரவுடி சிக்கினான் ....

14. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்ட மன்றத் தொகுதி த.வெ.க. நிர்வாகிகள் நியமனத்தில் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. தலையீட்டை கண்டித்து த.வெ.க. நிர்வாகிகள் வாலாஜாபாத்தில் சாலை மறியல் ...

15. ஆவடி மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் திடீர் மின்வெட்டு , கவுன்சிலர் கள், அதிகாரிகள் அதிர்ச்சி ...



16. தேனி சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பி ஓட்டம்.

தமிழ்நாடு முழுவதும் மோசமான சட்டம் ஒழுங்கு.

கைதிகள் தப்பிச் சென்றிருப்பது வெட்கக் கேடானது.

17. செஞ்சி சிறுமி மாயம் 16 நாட்களாகியும் துப்பு துலக்காத காவல்துறை.

சிறுமி குறித்து தகவல் ஏதும் கிடைக்காமல் திணறும் சி.பி.சி.ஐ.டி. போலீசார்.

குழந்தை மாயமாகி 2 வாரங்களுக்குப்பிறகு, சிறுமி குறித்து தகவல் தெரிந் தால் தெரிவிக்குமாறு விளம்பரம் வெளியிட்டுள்ளது சி.பி.சி.ஐ.டி.

18. கிருஷ்ணகிரி மாவட்டம் பெப்பாலப்பள்ளியில் கோவிந்தராஜ் என்பவரை அரிவாளால் வெட்டிவிட்டு மர்ம நபர்கள் தப்பி ஓட்டம்

அரிவாள் வெட்டில் படுகாயமடைந்த நபரை பொதுமக்கள் மீட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.